Regd. M. No. 4565

# தமிழ் மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.


| மலர் 3 | செப்டம்பர் 1943 | இதழ் 9. |
| --- | --- | --- |



ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.



உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

## விரணத்திற்கு வங்கப்புகை

காரீயம், ரசம், துருசு, தாளகம், கருங் குங்கில்யம், கடுகு, எருக்கு, இவைகளைப் பச்சைப் புகையிலைச்சாற்ருல் அரைத்துப் புளியம் பட்டைத் தணலில் போட்டு மூன்று நாள், கிரந்தியால் உண்டான விரணத்தி (வெடி சூலை)ற்குப் புகைபிடிக்க நீங்கும் என்ப.

## விரணத்திற்கு வங்கச்சீலை

ஈயச் செந்தூரம் ஒரு சேர், நல்லெண்ணெய் இரண்டு சேர் சேர்த்து இருப்புச் சட்டியில் இட்டுக்காய்ச்சி இருப்புக் கரண்டி கொண்டு துழாவிப் பக்குவத்தி லெடுத்துக்கொள்ளவும். இதனைச் சீலையில் தடவி விரணத்திற்குப் போட்டுவரத் தீரும்.

## விரணத்திற்கு வங்கக்களிம்பு

வங்கசெந்தூரம், மிருதார் சிங்கி வகைக்குப் பலம் ஐந்து, துருசு பலம் இரண்டரை, இவைகளைக் கல்வத்திட்டு நுண்பொடி செய்து ஒரு வீசை வெண்ணெய் சேர்த்தரைத்துக் கொள்க. விரணங்கட்குத் தடவிவரக் குணமாம்.

## காரீயக்கோல்

காரீயக்கோலினுல் அஞ்சனத்தை யெடுத்துக் கண்ணில் தீட்டக் கண் வியாதிகள் நிலை நிற்காதோடும் என்பதை,

“ காரீயக் கோல்கள் தம்மிற் கருது மஞ்சனத்தை வாங்கி
நேரதாய் விழியில் தீட்ட நிலை நில்லா ரோகமாகும் ”

என்ற வடிகளால் அறிக

## வங்காஞ்சுக் குறிகுணங்களும் தீர்வும்

வங்கம் நாட்பட்டு விடமித்த குறிகுணங்கள்: பல் ஈறு கறுத்தல் அல்லது நீலவர்ண மாதல், வயிறு நோதல், கொப்பூழ் வலித்தல், மலபந்தம், உப்புசம், கைகால் தளர்ச்சி, பாரிச வாயு, காமாலை, இளைப்பு ஈளை முதலியன உண்டாதலும் தேகத்தின்மேல் ஒருவித சொறி யுண்டாதலுமாம்.

## முறிவு

இசைப்பா யிருவங்சங் கொண்டோர்க்கு நல்ல
இசைப்பாங் கரும்பூ விலையைத்—தசைப்படாக்
கருங்கோழி மாமிசமாங் காட்டுப் புளியரணை
நறுவேரா மென்றே நீ நாட்டு.

கறுப்புப் புல்லாஞ்சி யிலையை இடித்துப் பிழிந்தசாறு வேளைக்குக் காலாழாக்காகக் காலை மாலை இரண்டு வேளையும் நஞ்சு மாறும் வரைக்கும் குடிக்க வேண்டும். கருங்கோழி மாமிசத்தைச் சமைத்துச் சாப்பிடவேண்டும். காட்டுப் புளியரணை வேர்க்கல்கம் சுண்டையளவு வீதம் நஞ்சு மாறும் வரை கொள்ளவேண்டும்.

---

குறிப்பு:—* சிவலிறைச்சி பித்தம் சிலேத்மமந்தம் வாதம்
கவலையற வோட்டியுடல் காக்கும்—புவனமதில்
மெய்க்குப் பலஞ்செய்யும் வீரியமு முண்டாக்கும்
சிக்கியம லங்கழிக்கும் செப்பு. (73-ம் பக்கம்)

கவுதாரியை சிவலென்று ஆண்டிருப்ப, தேரர் சிரவல் என்று ஆண்டிருக்கின்ருர். இஃது அக்காலத்து வழக்குப்போலும்.

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | செப்டம்பர் 1943 | இதழ் 9


## இரசம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

### இத்தோஷம் போக்கா ரசநோய்கள்

1. உண்டீனம் சூலை; 2. கௌடில்யம் கடால நோய்; 3. அந வர்த்தம் ப்ரமை; 4. சங்கரம் தாது நஷ்டம்; 5. ஷண்டத்வம் சந்தாபம்; 6. பங்குத்வம் தாகம்; அன்றிக்குஷ்டம்; 7 சமலத்வம் சுரம்; அன்றி மூர்ச்சை; 8. சவிஷத்வம் சரீர இளைப்பு என்பன. இவற்றை;

" உண்டீனங் கௌடில்யம் ஓதுமநவர்த்தம்
ஷண்டத்வம் பங்கோடு சங்கரம்—விண்ட
பளுவாற் சமலத்வம் பன்னுசவி ஷத்வம்
விளுமெண் ரச தோடம் வேறு.

உண்டீனம் சூலைநோயுண்டாங் கௌடில்யமோ
மண்டை நோயாகு மநவர்த்தமோ—உண்டாம்
பிரமை ஷண்டத்வம் சந்தாபம்பங் குத்வம்
வருதாகமாங் குட்டமாகும்.

ஆகுமே சங்கரத் வந்தாது நட்டமலம்
வேகுமே மூர்ச்சைசுர மேதினியில்—வாகு
சவிஷத்வ மேயுடலம் தானிளைப் புண்டாகும்
இவிஷத்தை யோட்டில் நலமே. என்னும் செய்யுள்களாலறிக.

### வேறு எண்வகைத்தோஷங்கள்

நாகம், வங்கம், மலம், வன்னி (அக்னி) சாஞ்சல்யம், விஷம், கிரி, அஸக்யாக்னி.

1. நாகம் கண்ட மூல நோய், தாமசம்; 2. வங்கம் குஷ்டம்; 3. மலம் கிற மாறல், மூர்ச்சை; 4. வன்னிதாகம்; 5. சாஞ்சல்யம் தாது நஷ்டம்; 6. விஷம் மரணம்; 7. கிரி சொறி; 8. அசக்யாக்னி மேகம் என்பன.

இவற்றில்; விஷம், வன்னி, மலம் என்னும் முத்தோடங்கள் முக்கியமானவை. இவற்றை அப்படியே கையாடினால் இவை, முறையே மரணம், சந்தாபம், மூர்ச்சை என்பவைகளையும், நாகம், வங்கம் என்னும் இத்தோடங்கள் கலப்புச்செய்து ஆண்டால் நோய் மத்தியில் குஷ்டத்தையும் உண்டாக்கும்.

## இரசத்தின் எழுவகைச்சட்டைகள், அவற்றின் நோய்களும்

1. நாகம், 2. வங்கம், 3. மலம், 4. அக்னி, 5. விடம், 6. கிரி, 7. சபலம்.

1. நாகம் கண்டமூலம்; 2. வங்கம் குஷ்டம்; 3. மலம் அறிவின்மை; 4. விடம் மரணம்; 5. அக்னி தாக மோகம்; 6. கிரி ஜாட்யம்; 7. சபலம் வீர்ய நாசம் என்பன.

## இரச சுத்தா சுத்த குணம்

சுத்தி செய்யப்பட்ட இரசம் மரணத்தைப்போக்கும். ப்ரத்யட்சமாய் அமிர்தம் போல்வதாயிருக்கும். சுத்தி செய்யப்படா இரசம் விடத்துக்கொப்பாக விருக்கும்.

## இரசசுத்தி கிரமம்

இரசத்தை நல்ல நட்சத்திரத்தில் 100, 50, 25, 12, 5, 1 என்னும் கணக்காக எடுத்துச் சுத்தி செய்யவேண்டும். ஒரு பலத்துக்குக் குறைந்து சுத்தி செய்யக்கூடாது.

## இரச ஸம்ஸ்கார மந்திரம்

அகோர மந்திரத்தால் பூசித்துச் சுத்தி செய்யவேண்டும் அப்படி மந்திரம் எண்ணாத பதார்த்தத்தின் தேஜஸை வைரவர்கள் போக்கி விடுவார்கள்.

## எண்வகைத் தோடம் போக்குபாயம்

1. நாகம்:—இரச எடைக்குப் பதினெடை, செங்கல்தூள், மஞ்சள் தூள், இவைகளை ஒன்றன்பின் ஒன்றாகப்போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு நாள் அரைத்து புளித்த தண்ணீரில் கழுவினால் நாகதோடம் நீங்கும்.

2. வங்கம்:—விசாலம், அழிஞ்சில்வேர் போட்டுப் பழச்சாற்றால் ஒரு நாள் அரைத்துக்காடி நீரால் கழுவவேண்டும்.

3. மலம்:—இலந்தைவேர் சேர்த்துப் பழரசத்தால் ஒரு நாள் அரைத்துக் காடி நீரால் கழுவவேண்டும்.

4. அக்னி:—சித்திர மூலப்பட்டை சேர்த்துப் பழரசத்தால் அரைத்துக் காடியினால் கழுவவேண்டும்.

5. சாஞ்சல்யம்:—கரியூமத்தைவேர் சேர்த்துப் பழரசத்தால் அரைத்துக் காடியினுல் கழுவவேண்டும்.

6. விடம்:—திரிபலைச்சூரணம் சேர்த்துப் பழச்சாற்றினுல் அரைத்துக் காடியினுல் கழுவவேண்டும்.

7. கிரி:—திரிகடுகு சூரணஞ் சேர்த்துப்பழச்சாற்ருல் அரைத்துக் காடியினுல் கழுவவேண்டும்.

8. அசக்யாக்னி:—நெருஞ்சில் சூரணம் சேர்த்துப் பழச்சாற்ருல் அரைத்துக் காடியினுல் கழுவவேண்டும்.

இவைகளை யெல்லாம் தப்த கல்வத்திற் செய்யவேண்டும்.

## தப்த கல்வ லட்சணம்

இரும்பிலாவது கறுத்த கன்னியிலாவது கல்வஞ்செய்து தனி வீட்டில் பள்ளந்தோண்டி அப்பள்ளத்தில் வெள்ளாட்டு மயிர், உமி, இவைகளை யிட்டு நெருப்பிட்டுத் தீ யுறைக்கும்படி அக்குழியின்மேல் கல்வம் வைத்துச் சுத்தி செய்வதேயாம்.

இவைகள் இரண்டு விதமான எண்வகைத் தோடங்களும், ஒரு வகை எழுவகைத்தோடங்களும் அவற்ருல் உண்டாகும் நோய்களும் கூறுகின்றன.

இவற்றில் நாகம் முதலிய எண்வகைத்தோடம் கூறும் ஒரு வகைக்கே அத்தோடங்களை நீக்கும் வழியும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகளன்றித் தோட நோய்களும் ஒன்றற்கொன்று மாறுதலாக விருக்கிறது. இவை நிற்க, தேரையர் என்பவர் எண்வகைத் தோடங்களும் அவற்ருல் உண்டாகும் நோய்களும், அகத்தியர் என்பவர் எழுவகைத் தோடங்களும் அவற்ருல் உண்டாகும் நோய்களும் அவற்றைப் போக்கும் வழிகளும் கூறுகின்ருர். அவற்றில் முதலாவது.

### தேரையர் கூறும் எண்வகைத்தோடங்களும் நோய்களும்

| | |
|---|---|
| 1. சர்ப்பம் : கொப்புளம், | 5. சாஞ்சலம் : கோது நிறம் |
| 2. வங்கம் : குட்டம், | 6. மலம் : விந்து நட்டம் |
| 3. கந்தி : அக்கினி, | 7. காளம் : இறத்தல் |
| 4. வன்னி : எரிச்சல், | 8. மந்தம் : மூர்ச்சை என்பன. |

இதை ;

"சர்ப்பம்வங்கங் கந்திவன்னி சாஞ்சல மலங்காளம்
ஒப்பில்மந்த மெண்தோட மோட்டிரதத்—தைப்புசியார்
கொப்புளங்குட் டங்கியெரி கோதுவிந் திளைப்பிறத்தல்
அப்புளமூர்ச் சைக்குமுரி யார்." என்னுஞ் செய்யுளாலறிதல் வேண்டும்.

## அகத்தியர் ஏழுதோஷங்களும் நோய்களும்

1. நாகம் —துர்க்கந்தம்
2. வங்கம்—குஷ்டம்
3. கந்தி —தாகம்
4 வன்னி—தாது நஷ்டம்
5. சாஞ்சலம்—உயிர்போக்கல்
6. விடமம் —விடப்பிணி
7. லோகம் — மோகம் என்பன.

இதை,

"தானோர சத்திற்குச் சத்ததோ டங்களுள
மானேய தன்பேர் வகுத்துரைப்பேன்—ஏனமாம்
நாகவங் கதோட நவில்கந்தி தோடமோ
டாகும்வனி சாஞ்சல தோடம்.

தோடவிட மம்லோக தோடமதிலே நாக
தோடந் தனக்குண்டு துர்க்கந்தப்—பாழுமந்த
வங்கதோ டத்தில் வருங்குஷ்ட நோய்கந்தி
யங்கதோ டந்தாக மாம்.

ஆம்வன்னி தோடத் தருந்தாது நட்டமாம்
போம்சாஞ் சலமுயிர் போக்கிவிடும்—தாம்விடம்
என்னுந்தோ டத்திற் கிசைந்தபிணி யுண்டாகும்
அன்னியலோ கத்தோடமோ கம்" என்னும் வெண்பாக்க

ளால் அறிதல் வேண்டும்.

இனி, இவ்விருவர் கொள்கைகளில் எண்வகைத் தோடக்கூற்றில் முதல் ஐந்து தோடங்களின் பேர்களும், ஒத்திருக்கின்றன. மற்ற மூன்றான மலம், காளம், மந்தம் என்பனவும், எழுவகைத் தோடக்கூற்றில் மற்ற இரண்டான விடமம், லோகம் என்பனவும் வேறு படுபவற்றுடன், தோட குற்றங்களில் வங்கதோடம் ஒன்றற்கு மாத்திரம் இருவர் கொள்கைகளும் ஒத்து மற்றவை ஒவ்வாமையாய் இருக்கின்றன.

இவையன்றி, இன்னதோடமுள்ள இரசம் இன்ன வடிவாய் இருக்கு மெனவும், அக்குற்றம் தூய்மை செய்யப்பட்ட பின்னர் இன்னவடிவா யிருக்கு மெனவும் கண்டறியும் பரீட்சை இவ்விரு வகைக்கொள்கை யுடையார்கள் நூல்களிலேனும் வேறு நூல்களிலே னும் காணப்படவில்லை.

தேரையர் எண்வகைத் தோடங்கள் சொன்னவாறே அவற்றை நீக்கும் வழியும் சொல்லி யிருத்தல் வேண்டும். அவ்வழிகள் கிடைக் காமையால் சொல்லவில்லைபோலும் என நினைக்க இடந்தருகின்றது.

எழுவகைத்தோடங்கள் சொன்ன அகத்தியர் மாத்திரம் அவற் றை நீக்கும் வழியையும் சொல்லி யிருக்கிறதாகத் தெரிகிறது.

இவையன்றித் தேரையர் கரிசல் 300. என்னும் பின்வந்த நூல் எழுவகைத்தோடங்கள் உளவெனத் தொகை கூறித் தீர்க்கும் வழி யையும் சொல்லுகின்றது ; அவை ;

"செங்கலுப் பொடுசாரி பண்ணேநேர் சீனமாவெடி காரநேர்
செரியூமாவரிக் குமரிநீர்கள் செலுத்தி ஓர்சேர் சாற்றினில்
அங்கரைப்பது மேழுநாளதில் சட்டை யேழறுஞ்சுத்தியாம்"

என்னும் அடிகளால் அறிதல் வேண்டும்.

இவையன்றி, வேறு பல நூல்கள் பல வகையாக ரசசுத்தி சொல்லுகின்றது.

ஆனால் "போகர்" தாம் செய்தருளிய 7000த்தில் இரசத்தின் தோடம் ஏழேனும், எட்டேனும் அவற்றை நீக்கின பின்னரே பதினெட்டுச் சுத்தி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார். அதை;

"எடுப்போர்க்குச் சூதமென்ற ரசத்தைக் கேளாய்
எழிலான பொற்கென்ற நிறமாய்க்காணும்
தொடுப்போர்கட் கேழுவித தோடநீக்கிச்
சுத்திசெய்து பதினெட்டுப் பின்புதானும்"

எனவும்; புகன்றிருப்பதால் அறிதல் வேண்டும்.

## இரசசுத்தி 18 (அறுசீர்விருத்தம்)

ஆச்சிது ரசத்தின் சுத்தி யறைகிறே னடைவாய்க் கேளாய்
போய்ச்சுற்று புகையூறற்றான் மஞ்சளுஞ் செங்கற்றாளும்
பாய்ச்சுவாய் பொடியிருப்பு பண்ணிடு வரைசெய் பின்னர்
தேய்ச்சிடு மேனிச் சாறும் தேன்பிரண் டையுமாய் மத்தி.

மத்தித்துப் பின்பு கேளாய் மருவிய விஞ்சிச் சாறு
கொத்தினு வாரைப் பட்டைக் குறுகிய குடிநீர் தன்னில்
சித்திர மூலச்சாற்றைச் சேர்த்தரை திரிபலாதி
வற்றிய குடிநீர் தன்னில் மத்தித்தல் வளமை மேலே.

கேளினி யமுரியோடு கிளர்ந்திடு மத்தி யித்தி
நாளினில் நாவற் பட்டை நன்றாகக் குடிநீர் செய்து
வாளினில் வெவ்வேறாக மர்த்திக்கப் புனித மாகும்
ஆளினி யிரத சூது மற்றுவெவ் வேறதாமே.

ஆமினி வகை வகைக்கோ ரளவதாய்க் கொண்ட ரைத்துத்
தாமினி யொவ்வொன்றாகச் சலத்தினிற் கழுவிப்போடின்
ஓமினி வாலேசூத ஆறுநீங் கிந்தச் சுத்தி.

அகத்தியர் கன்ம சூத்திரம் 150

## 2. எழு சுத்தி

செங்கலுப் பொடு சாரி பண்ணேநேர் சீனமா வெடி காரநேர்
செறியுமா வரிக்குமரி நீர்தனைச் செலுத்தியோர் சேர்சாற்றினில்
அங்கரைப்பது மேழு நாளதிற் சட்டை யேழறுஞ் சுத்தியாம்.

வேறு தேரையர் கரிசல் 300.

## 3. ஏழு சுத்தி (வேறு)

கொன்றை யழிஞ்சில் கொடிவேலிக் கோலப்பட்டையில் மர்த்திக்க
இன்றே யொட்டடை யதனோடே யிட்டே நாழிகை மர்த்திக்கத்
தென்றற் சங்கம் பழுபாகற் றெண்ணீ ரிட்டே மர்த்திக்க
நன்றே கற்றாழஞ் சாற்றில் நாள்மர்த்திக்க நலமாமே.

நூலாசிரியர் தெரியவில்லை.

## 4. ஒன்பது சுத்தி

முருங்கை யிலைச்சாறது வாகும்முதிர்ந்த வழிஞ்சிற் பட்டையுமாம்
முருக்கூமத்தை யிலைச்சாறு முதிர்கொடிவேலிச் சாற்றிலுமாம்
அருங்காச் சாரணை யிஞ்சியுடனுனைகையான் சாற்றிலுமாம்
இருங்கா வெற்றிலைச் சாற்றிலுமா மென்றாரகத்திய மாமுனியே.

நூ. தெரியவில்லை.

## 5. பதினைந்து சுத்தி

இரதந் தனக்குச் சட்டை யேழெட்
டறைந்தார் முன்னோ ரவற்றிற் றனித்தனி
தூய்மை சொல்லிச் சுகித்தனர் நிற்க
வாய்மை யதற்கு வன்மை யேற்றும்
தூய்மை விதிசில தொகுத்துச் சொல்வன்
ஆய்வுற் றவற்றை யறிந்து செய்யின்
நோய்பகப் பிளந்தெறி நுண்கோ டரியாம்
ஆகமே சூத மதைக்குழிக் கல்லில்
பாகமாய் வேண்டும் பருவள விட்டங்
கவ்வளவே யெடை யரித்துகள் புகையூ
றவ்வள வேவெற் றிலைச்சா றாக்கி
அப்பாற் றுழைநீ ரீகத் தடுநீர்
செப்பரத் தம்பூ சிகைசா றோடல்
வெற்றிலைச் சாறு மிளிர்பா கற்கிழங்
கத்தகு சாறு மைங்கோ லத்தாம்
சத்தம் மான்பச் சரிசிச் சாறும்
தத்துசா ரணையர சம்பட் டைச்சா
றற்ற கொன்றை யுடற்றோற் சாறும்
கொத்தான் சாறுங் கூட்டித் தனித்தனி
மும்மூன்று கடிகை முறையா யரைத்திட்
டப்போ தப்போ ததனைக் கழுவி
னிப்பாற் சூத மிரவி புரையும்
பன்னுன் கென்னும் பகர்பொருட் டேய்மை
நன்று யுரைத்து நாட்டினேம்
குன்று மருத்துவர் குறியறிந் திடவே.

அல்வெற்றிலை-கம்மாறுவெற்றிலை; ஐங்கோலத்து ஆம்-அழிஞ்சில்சாறு.

# கருவங்கம்

(சென்ற மாதத்தொடர்ச்சி)

குருஞ்சிப் பட்சிப் பறப்பது போல சத்தம் கன்னத்திலுண் டாகித் தலை திரும்பும்படி யுப்புசம், பக்கம், தோள், கை, காலிவை களை யிழுத்து உபத்திரவம் கொடுக்கும் விடவாயு அதைச்சேர்ந்த மார்ச்சாலவலி, பாரிச வாதம், பிராந்தியானலம், பிரமிய வாந்தி, பாண்டுவானிலம் இவைகளுக்கு முலைப்பால்.

பருந்து எப்படி வட்டமிட்டு அசைந்து பறக்குமோ அப்படி உச்சந்தலையில் சத்தமும், சுழற்சியும் உண்டாகி மயிர்க்காலெல்லாம் வியர்வையை யுண்டாக்கிக் கடுக்கப்பட்ட சிறுக்கு வாதம், அதைச் சேர்ந்த காக்கை வலி, பெரும்பாட்டு மூர்ச்சை, மரணவலி, பாரிச வாதக்கிராணி, வாதக்கிராணி மூர்ச்சை போன்ற பிணிகளுக்கு கற்று ழைச்சோற்றினது சாறு.

இராச மயில் எப்படி இறகு விரித்து ஆடியொழிந்தவுடன் பறக்குமோ அப்படி நெற்றியில் உண்டாகி, அசீரணம், குன்மம், புளித்தேப்பம், வாந்தி, விக்கல், சரீரத்தினவு முதலியவற்றை யுண்டு பண்ணும் படர் வாதம், அதைச்சேர்ந்த பயித்திய காசம், பிடிப்பு, பல்லை, மகோதரம், நீரிழிவு, நீரருகல் போன்ற பிணிகளுக்கு வெந்நீர்.

வண்டு ரீங்காரம் செய்து பறப்பது போலத் தலையின் பின்புறத் தில் சத்தத்தையும், வலியையும், உடல் பாரிப்பையும் உண்டுபண்ணு கின்ற திணறு வாதத்திற்கும் அதைச்சேர்ந்த வரப்பட்ட கொஞ்ச நேரம் குளிர் இருந்து பின் சுரம் காய்கின்ற பல்வகைச்சுரங்கள், நேத் திரவாயு, துற்மாமிசப் படலம் போன்ற பிணிகளுக்குத் தேன்.

மற்றும், வாதப்பிணிக்குக் கள்ளிலும், பித்தப் பிணிக்குக் குளிர்ந்த நீரிலும், கபப்பிணிக்குக் கருப்பஞ் சாற்றிலும் அனுபானித் துக் கொடுக்க வேண்டிய தென்பதாம். இதனைக் கீழ்க்கண்ட செய்யு ளால் அறிக.

“கறுத்த வங்கத் தடலையை யுணுமுறை
செவத்த கங்கைச் சடையவ ரெனு மொரு
கருத்தர் நந்திக் கருளிய மனுநெறி—யிதுபாராய்
கருத்தறிந் தப்படி யளவை களொரு
பருப்பினுஞ் சிற்றளவை களவை கொடு
கணித்திடும் பத்திய வகைதொகை விரி—யனுபானம்
மறுத்திடுஞ் சொற்பிழை வருமது நினை
யகத்தியன் பொத்தக நெறிவகை பல
மலைத்திடும் பெற்றிமை யலவறி வொடு—மொழிவாயே
வரித்திடுஞ் சித்தர்கள் பலமுறை வழி
வெளுத்திடும் பற்பமு முளவது விதி
வழுக்கினுங் கெட்டிடு முள மிழுதைய—ரறியாரே

பறக்குநன் பற்பல குருவி களென
வசைக்கு நொந்தப் படி தலை வலிபடு
பனிப்பின் வெப்பில் பிணிமிகு மதுகெட—வறிநீயே
பசுத்த கஞ்சத் தறல்மது சுடுபுனல்
கருப்பின முமப்படி பிழி கனிமழை
பயத்தொடும் பற்பல வுளவகை யது—கொளலாமே
யறுக்கு முந்தைப் பிணிகளை யடியொடு
மெடுத்த தந்தத் தடிமுன மிறுகிடு
* மசட்டை யுந்திப் பெருமையை நிறுவிடு—நிசமாயே
யருக்க விம்பத் தொளிதரு மதியென
முகத்தை யுஞ்சக் கதிர்விடு மதரதி
யணைக்கு மின்பப் பருவமு மிகவரு—மினிமேலே."

வேறு

கற்கவசம் புக்கமலங் காயமுறு காயமெனிற்
கற்கவசம் புக்கமலங் காரியங்—கற்கவச
மாரிசியு மேல்வலையு மாலுமறுங் காமனுக்கு
மாரிசியு மேல்வலையு மாய்.

(சொ-ரை) காயம்-சரீரத்திற்கு, உறு-உற்ற, காயம்-காயங்கள் (நீங்கி), கற்கு-மலைக்கு, அவ்வசம்-(நிகரான) அத்தன்மை, புக்கு-அடைந்து, அமலம்-பரிசுத்தம், எனில்-ஆகவேண்டுமானால், கற்க வசம்பு கமலம்-கடைச்சரக்காகிய வசம்புக் குடிநீரில், காரியம்-காரிய பற்பத்தைக்கொள்ள, கல கவசம்-(தேகத்துக்கு) இது வச்சிர கவச மாகும், மாரிசி-மிளகை, மேல்-மேற் கூறியபடியே குடிநீர் செய்து அனுபானமாக வுபயோகிக்க, வலையும்-வல்லைக்கட்டியும், மாலும்-பித்த சோகையும், அறும்-நீங்கும், காமனுக்கு-திப்பிலிக் குடிநீரில், மார் இசியும்-இருதய சம்பந்தமான ரோகங்களும், மேல் வலையும்-சரீரத்தில் கவிந்திருப்பதான பித்த பாண்டும், மாய்-மாய்ந்துபோம்; எ-று.

இதனைக் கீழ்க்கண்ட மேற்கோள் செய்யுள்களும் வலியுறுத்தும்.

"நோயப்பா முதலில் வகை மூன்றப்பாலே
நாறு நூறாயிர மாமதிலே தோற்றம்
பேயப்பா பிடித்ததென வேறு வேறு
பிணிக்கணம் வேறனுபான மருந்தொன்றேனும்
வாயப்பா குண மொன்றே யதிலே மாயும்
வழிவழிக்கே குணித்த முறை வருவதாகும்
நீயப்பா கற்கவகை மூன்றுங் கற்று
நீறுவுமுதல் பிணிகளையு மறிகுவாயே." (போகர் ஆயிரம்)

---

* பாட பேதம்:
"மகத்தை யிந்தப் புவியுற வலிதரும்"

"நோய்வகை மூன்று மறிந்து வந்து
நோக்கு மவிடத மனுபானந்
தாய்வகை யென்னப் பிரயோகஞ் செய்யத்
தப்பாது கற்க மென்றுடாய் பாம்பே."

(பாம்பாட்டிச் சித்தர் விருத்தக் குறுந்துறை)

காரீய பற்பத்தினை யுண்ணும் நாளளவும் பத்தியமும்:—இதனை ஒரு மாத காலம் அருந்தி, தினை, வரகு, அபினி, கொள், புளி, அகத்தி, பூசனி, பெண் போகம் இவற்றை நீக்கிப் பத்தியமாக விருக்கப் பிணி நீங்கு மென்ப. இதனை,

"அனுபானித் தவிழ்தமிவ்வா றயினுமுன்னினைத்த பத்தியந்
தினைவர கபினி கொள்ளு சிந்தமச் சங்கூஷ் பாண்டம்
வனிதைய ராகா தாகில் வாட்டுமிவ் வவிழ்தந்தானே
வினையரை யரைமதிக்குள் வீயுமற்றதும் பின்னுமே"

என்ற செய்யுளால் உணர்க.

## கருவங்க பற்பம் (வேறு)

தேட் கொடுக்கிலைச் சாற்றைக் கருவங்கத்திற்குச் சுருக்குக் கொடுத்து வெட்டையாக்கிப் பிறகு மேற்படி ரசத்தில் அரைத்து, வில்லை செய்து, உலர்த்திச் சில்லிட்டுச் சீலை செய்து புடமிட்டெடுக்கப் பற்பமாம். இதனை நீரில் அனுபானித்துக் கொடுக்க க்ஷயம் நீங்கு மென்ப. இதனைக் கீழ்க்கண்ட வடிகளால் உணர்க.

"தேட் கொடுக்கினற் சிருள நீறுசெய்
தாட் கருத்தற் காசற லினலற
வீட்டும்............................"

## வேறு

"காரீயம் பதும நாபனலர் மழையாற் பற்பமாகும்."

(பொ-ள்.) கருவங்கத்தைத் துளசிச்சாற்றால் அரைத்துப் புடமிட்டெடுக்கப் பற்பமாம்; எ-று.*

## வேறு

இலைக்கள்ளிச் சாற்றைக் கருவங்கத்திற்கு விட்டு மூன்று நாளரைத்து, வில்லை செய்துலர்த்திப் புடமிட்டெடுக்கப் பற்பமாம். இப் பற்பத்தால் காசம் நீங்கி ஆகம் தங்கத்தைப்போலாம் என்ப.

## வங்கச்சுண்ணம்

வங்கம் 4 பங்கெடுத்து உருக்கி, உருக்கு முகத்தில் 4 பங்கு இரசம் சேர்த்து வெட்டை யாக்கி அரைத்துப் பிறகு 4 பங்கு அண்டவோடு சேர்த்து அரைத்து 1 பங்கு வீரம் சேர்த்துத் தூளாக்கி, சுண்ணும்பு நீர் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு நன்றாய் மடியும்படி அரைத்து வஜ்ஜிர மூசையிலிட்டுச் சீலை மண் செய்து உலர்ந்தவுடன் உலையிலிட்டு மூசை அழுக ஊதி யெடுக்கச் சுண்ணமாம்.

அளவு:—1 அரிசி யெடை

தீரும் நோய்:—இச்சுண்ணத்தைத் தேனில் அனுபானித்து மேக சூலைக்குச் சிறப்பாக கவர்ண்மெண்ட் இந்திய மருத்துவ ஆதுரசாலையில் கையாளப்படுகின்றது.

வங்கசெந்தூரம்

ஒரு பலம் சுத்தித்த வங்கப்பொடிக்கு நாகமல்லி யிலைச்சாறு, வாழைக்கிழங்கின் சாறு இரண்டையும் தனித்தனியாக நான்கு பலம் விதம் விட்டு நான்கு நாளரைத்து, வில்லை செய்து மூன்று நாள் உலர்த்தி, கவசித்து ஒரு நாள் உலர்த்தி 30 வரட்டியில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாம்.

| துணைமருந்து | | தீரும்நோய் |
|---|---|---|
| வெல்லம் | — | பித்த சன்னி |
| பால் | — | கழலை (புரைகுழல்) |
| ஆலம்பால் | — | சலவியாதி |
| கருப்பஞ்சாறு | — | கழுத்தில் வருகிற விரணப் புற்று (கண்டமாலை) |
| சந்தனக்குழம்பு | — | சத்தி குன்மம் |
| சர்க்கரை | — | நேத்திரவாயுக்கபம் |
| வன்னியிலைச்சாறு | — | தலைக்காங்கைப் பித்தவரட்சி |
| கள் | — | சேட்பவிக்கல் |
| சிறுநீர் | — | காசரோகம் |
| தேன் | — | தேமல் |

வேறு

ஒரு பலம் காரீயத்தைச் சட்டியிலிட்டு உருக்கு முகத்தில் பச்சை மஞ்சள் தூள் பலம் எட்டைச் சிறிது சிறிதாகக் கிராசம் கொடுத்துக்கொண்டு நாயுருவி சமூலத்தால் 15 நாழிகை வறுத்துப் பிறகு, சவுக்காரம் பலம் கால், கொடுத்து வறுத்துப்பின் வெடியுப்பு கழஞ்சு சேர்த்து வறுத்து, முடிவாக அரிதாரம் கழஞ்சு சேர்த்து வறுத்தெடுக்கச் செந்தூரமாம்.

கருவங்கச் செந்தூரத்தொழில்

கருவங்கச் செந்தூரத்தைக்கொடுக்க உள்ளே அடங்கியுள்ள பிணிகள் (சருமத்தில்) பேரெழுப்பி ஆறிவிடும். மேகப்பிணி தலைகாட்டாதோடும் என்பதைக் கீழ்ச்செய்யுள் உணர்த்தும்.

“ உள்ளிருந்தவினை மேலெழும்பியொரு
  கோடி கோடிபிணி யாகிடும்
எள்ள தளவுமிறாற் கன்ம மேதுமிலை
  மேலு மேலுமொளி யாவதாய்க்
கள்ள மில்லைகரு வங்க முண்டவர்கள்
  கற்ப தேகசிவ யோகிகாண்
விள்ள லாமோ பெரியோர்க ளிட்டவிதி
  மேக மென்றவை யொளிக்குமே.”

(முகப்பின் பின் பக்கம் பார்க்க.)